**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 308/2021**

**வா.சா.1 – சிவராமன்**

**<u>10–11–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வழக்கு சொத்து முனியபோயன் பெயரில் உள்ளது. முனிய போயனின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லுவது போல் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா கட்டிடத்தில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் 8 அறைகள் உள்ளது. அதில் ராஜாமணி, சிவராம், கவிதா ஆகியோர்கள் உள்ளார்கள். கவிதா இரண்டாம் பிரதிவாதி என்றால் சரிதான். கவிதா பொக்கியத்திற்கு எத்தனை வீடு வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் நான்கு வீடுகளை வாடகைக்கு விட்டுள்ளார்.

2. முனிபோயனுக்கு எனது தகப்பனாரை தவிர 7 வாரிசுகள். தாவா சொத்தில் பாகப்பிரிவினை கேட்டு 19.02.2021ல் 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.7 வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.7ல் குறிப்பிட்டுள்ள 2ம் பிரதிவாதியின் முகவரியும் பிரமாணவாக்குமூலத்தில் உள்ள எனது முகவரியும் ஒன்றுதான் என்றால் சரிதான். பாகம் கேட்டு அறிவிப்பு அனுப்பிவிட்டு உறுத்துக்கட்டளைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி எற்கனவே இருந்து வரும் நிலையில் அவருக்கு எதிராக கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 2 சொத்து வரி, 2 தண்ணீர் வரி, 2 மின் வரி உள்ளது என்றால் சரிதான். அதில் ஒன்றை 2ம் பிரதிவாதி செலுத்தி வருகிறார் என்றால் சரிதான்.

4. சொத்தில் ஒரு பாகம் மட்டுமே எனக்கு உரிமை உள்ள நிலையில் முழுவதற்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் எனது அப்பாவின் சகோதரி கொண்டாத்தாள்ளிடம் இருந்து ஒரு பாகத்தை கவிதா வாங்கியுள்ளார். நாங்கள் 2 பாகம் வாங்கியுள்ளோம். அந்த பாகத்தில் கவிதா அத்து மீறி நுழைந்து குடியிருந்து வருகிறார். எனது கிரைய பத்திரத்தையோ கவிதாவின் கிரைய பத்திரத்தையோ தாக்கல் செய்துள்ளளேன் என்றால் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யப்படவில்லை என்றும் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.10 13:43:03 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.